DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM

Calender
Preliminary Register
Sessions

**CC.No.81/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | P.W.1 | Caste | : | |
| Name | : | ஆனந்தன் | Age | : | 35 |
| F/N. | : | பிச்சை | Occupation | : | துணை மண்டல அலுவலர், மண்டபம் |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of April 2021

20.04.2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மண்டபம் மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பக அறக்கட்டளையில் துணை மண்டல அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 18.10.2019ம் தேதியன்று மண்டபம் வனச்சரகருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி இராமேஸ்வரம் புலித்தேவன் நகர் கடற்கரை பகுதியில் வனச்சரகர் திரு.வெங்கடேஷ் தலைமையில் நானும், வனக்காப்பாளர் திரு.ஜான்சன் அவர்களும் காலை மணி சுமார் 11.30 ரோந்து சுற்றி வந்தோம். கடற்கரை மாரியம்மன் கோவில் அருகே ஒரு கீற்றுக்கொட்டகை அருகே 3 நபர்கள் முருகேசன், சக்திவேல், முருகைய்யா ஆகியோர்கள் (ஆஜர் 3 எதிரிகள்) மூன்று நீல நிறக்கேன்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். எங்களைப் பார்த்ததும் ஓட முயற்சித்தனர். சந்தேகத்தின் பெயரில் அவர்களை சுற்றி வளைத்து பிடித்து வனச்சரகர் விசாரித்த போது அரசால் தடைசெய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை விற்பனை செய்வதற்காக வண்டி வரும் என நின்றிருந்ததாக தெரிவித்தார்கள். அதன்பின்பு வனச்சரகர் அந்த இடத்திலேயே கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மூன்று நீல நிற கேன்களில் உள்ள கடல் அட்டைகளை கைப்பற்றினார். எடை போட்டு பார்த்ததில் சுமார் 120 கிலோ இருந்தது. கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக நானும், வனக்காப்பாளர் ஜான்சன் அவர்களும் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும். வனக்காப்பாளர் திரு.ஜான்சன் அவர்களால் H நமூனா அந்த இடத்திலேயே தயார் செய்யப்பட்டது. மேல்நடவடிக்கைக்காக பிடிபொருட்களையும், எதிரிகளையும் வனச்சரக அலுவலகம் கொண்டு வந்தோம். வனச்சரக அலுவலர் விசாரணை நடத்தினார். விசாரணையில் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல்

வாக்குமூலம் அளித்தார்கள். ஆஜர் 2 வது எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு என்ற பகுதியில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். மற்ற ஆஜர் 1 வது மற்றும் 3 வது எதிரிகளிடம் வனக்காப்பாளர் திரு.ஜான்சன் என்பவரால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. எதிரி முருகேசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும். எதிரி முருகைய்யா ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகும். அதன்பிறகு மற்ற ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினோம். கடல் அட்டைகள் நீதித்துறை நடுவர் முன்பாக அளிக்கப்பட்டது.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM

Calender
Preliminary Register
Sessions

**CC.No.81/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | P.W.2 | Caste | : | |
| Name | : | ஜான்சன் | Age | : | 54 |
| F/N. | : | திவ்யநாதன் | Occupation | : | வனக்காப்பாளர், மண்டபம் |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of April 2021

20.04.2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்திலும் மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்தேன். கடந்த 18.10.2019 ம் தேதி வனச்சரகர் திரு.வெங்கடேஷ் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி காலை சுமார் 11.30 மணியளவில் புலித்தேவன் நகர் கடற்கரை மாரியம்மன் கோவில் அருகில் நானும், வனவர் ஆனந்தனும், வனச்சரகர் வெங்டேசும் ரோந்து சென்றபோது கீற்றுக்கொட்டகை அருகே மூன்று நபர்கள்(ஆஜர் எதிரிகள்) மூன்று கேன்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் தப்பித்துச் செல்ல முயற்சித்தார்கள். நாங்கள் சுற்றி வளைத்து பிடித்தோம். பார்த்தபோது கேன்களில் அரசால் தடைசெய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இருந்தது. வனச்சரகர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அதில் நானும், வனவர் ஆனந்தனும் கையொப்பம் செய்தோம். மகஜரிலுள்ள என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகும். அந்த இடத்திலேயே வைத்து H நமூனா என்னால் தயார் செய்யப்பட்டது. அந்த H நமூனா அ.சா.ஆ.6 ஆகும். பிடிபொருட்களை கைப்பற்றி மண்டபம் வனச்சரக அலுவலகம் கொண்டு வந்தோம். கைப்பற்றிய கடல் அட்டைகளை எடைபோட்டு பார்த்தபோது சுமார் 120 கிலோ இருந்தது. அதன்பின் ஆஜர் எதிரிகள் முருகேசன் மற்றும் முருகையா என்பவர்களிடம் வனச்சரகர் விசாரணை செய்தார். நான் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆஜர் 1 வது எதிரி முருகேசன் என்பவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டது என்ற பகுதியில் உள்ள கையொப்பம் என்னுடையது அ.சா.ஆ.7 ஆகும். ஆஜர் 3 வது எதிரி முருகையா என்பவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டது என்ற பகுதியில் உள்ள கையொப்பம் என்னுடையது அ.சா.ஆ.8 ஆகும். அதன்பின்பு பிடிபொருட்களையும், ஆஜர் எதிரிகளையும் நீதித்துறை நடுவர்

முன்பாக ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினோம். கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளை நீதித்துறை நடுவர் முன்பாக அழித்தோம்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM

Calender
Preliminary Register
Sessions

**CC.No.81/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | P.W.3 | Caste | : | |
| Name | : | வெங்கடேஷ் | Age | : | 33 |
| F/N. | : | கோபால் | Occupation | : | வனச்சரக அலுவலர், மண்டபம் |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 20th day of April 2021

20.04.2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.10.2019ம் தேதியன்று காலை சுமார் 11.30 மணியளவில் இராமேஸ்வரம் புலித்தேவன் நகர் கடற்கரை மாரியம்மன் கோவில் தெருவில் கடல் அட்டை கடத்த இருப்பதாக எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி எனது தலைமையில் இராமேஸ்வரம் பிரிவு வனவர் திரு.ஆனந்தன் மற்றும் வனக்காப்பாளர் திரு.ஜான்சன் ஆகியோருடன் புலித்தேவன் நகரில் ரோந்து பணி மேற்கொண்டபோது அந்த பகுதியில் ஒரு கீற்றுக்கொட்டகை அருகில் மூன்று நபர்கள் மூன்று நீல நிறக் கேன்களை வைத்துக்கொண்டு எங்களை பார்த்தவுடன் தப்பி ஓட முயற்சித்தார்கள். அவர்களை வளைத்து பிடித்து விசாரணை செய்ததில் அவர்கள் மூன்று நீல நிற பிளாஸ்டிக் கேனில் அரசால் தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகளை விற்பனை செய்வதற்காக அந்த அட்டைகளை ஏற்ற ஒரு வண்டிக்காக காத்திருப்பதாக கூறினார்கள். மேலும் அவர்கள் வைத்திருந்தது அரசால் தடைசெய்யப்பட்ட வன உயிரினப் பாதுகாப்புச்சட்டம் 1972-ன் கீழ் குற்றமாகும். மேலும், அத்தாட்சி தயார் செய்து தனிநபர் சாட்சி யாரும் முன்வராத காரணத்தினால் இராமேஸ்வரம் பிரிவு வனவர் ஆனந்தன் மற்றும் வனக்காப்பாளர் ஜான்சன் முன்னிலையில் என்னால் மேற்படி கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டது. அத்தாட்சியில் மூன்று நீல நிற பிளாஸ்டிக் கேன்கள், பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆகும். மூன்று நீல நிற பிளாஸ்டிக் கேன்கள் அ.சா.பொ.1 (எண்ணம் -3) ஆகும். வனக்காப்பாளர் ஜான்சன் H நமூனா தயார் செய்தார். அந்த H நமூனா அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு பிடிபொருட்களையும், எதிரிகளையும் மண்டபம் வனச்சரக அலுவலகம் கொண்டு வந்தோம். பின்பு அவர்களை நான் விசாரணை செய்த போது எதிரிகள் முருகேசன், முருகைய்யா, சக்திவேல் ஆகியோர்களை விசாரணை செய்த போது எதிரி முருகேசனின் ஒப்புதல் வாக்குமூலத்தை வனவர் ஆனந்தன் என்

முன்னிலையில் பதிவு செய்தார். 1 வது எதிரி முருகேசனின் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.10 ஆகும். மற்ற எதிரிகளான சக்திவேல் மற்றும் முருகையா ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் ஜான்சன் அவர்கள் என் முன்னிலையில் பதிவு செய்தார். எதிரி சக்திவேல் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.11 ஆகும். எதிரி முருகையா ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.12 ஆகும். பின்பு கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகளை எடைபோட்டு பார்த்ததில் சுமார் 120 கிலோ இருந்தது. பின்பு அவர்களை வன உயிரின பாதுகாப்புச்சட்டம் 1972-ன் கீழ் வன உயிரின வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் -95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டது. படிவம் -95 அ.சா.ஆ.13 ஆகும். பின்பு மாண்புமிகு நீதித்துறை நடுவர் முன்னிலையில் மேற்படி பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகள் அழிக்கப்பட்டது. நீதித்துறை நடுவர் முன்னிலையில் கடல் அட்டைகள் எடை போடப்பட்டு கொட்டி அழிக்கப்பட்டதற்கான புகைப்படங்கள் (எண்ணம் -2) அ.சா.ஆ.14 ஆகும். மேற்படி வனக்குற்றமானது வன உயிரின பாதுகாப்புச்சட்டம் 1972-ன் கீழ் பட்டியல் I பகுதி IV-ல், பிரிவுகள்.2(2), 16, 9, 39(1)(a)(b), 39(3)(a)(b)(c), 40(2), 49(A)(a)(b), 50, 51(1), 52 பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும்.